**<u>சுருக்கம்</u>**

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் – 2015–2016–ம் ஆண்டில் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஏற்பளித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி-1) துறை

அரசாணை (நிலை) எண்.70 நாள்: 29.04.2015.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1)த் துறை, நாள் 2.12.2011.
2. அரசாணை (நிலை) எண்.91, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1)த் துறை, நாள் 24.09.2012.
3. அரசாணை (நிலை) எண்.67, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1)த் துறை, நாள் 3.07.2013.
4. அரசாணை (நிலை) எண். 102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1)த் துறை, நாள் 20.08.2014.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.82769/14/NREGS 3.1, நாள் 31.3.2015.

••••••

**<u>ஆணை:</u>**

ஊரகப் பகுதி முன்னேற்றத்திற்கான அடிப்படை அலகாக குக்கிராமங்களைக் கொண்டு அனைத்து ‘குக்கிராமங்களுக்கும்’ குறைந்தபட்ச அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நோக்கோடு 2011–2012–ம் ஆண்டில் ‘‘தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம்’’ அறிமுகப்படுத்தப்பட்டது. மேலே படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணையில் 2011–2012–ஆம் ஆண்டில் ரூ.680 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2,020 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 25,335 குக்கிராமங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஆணைகளும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

2. மேலே படிக்கப்பட்டவை இரண்டில் உள்ள அரசாணையில் 2012–2013–ஆம் ஆண்டில் ரூ.750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 2,250 கிராம ஊராட்சிகளில் உள்ள 18,581 குக்கிராமங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஆணைகளும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன. மேலே படிக்கப்பட்டவை மூன்றில் உள்ள அரசாணையில்

2013–2014–ஆம் ஆண்டில் 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 2500 கிராம ஊராட்சிகளில் உள்ள 15,115 குக்கிராமங்களில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆணைகளும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன. மேலும் மேலே படிக்கப்பட்டவை நான்கில் உள்ள அரசாணையில் 2014–2015–ஆம் ஆண்டில் 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 2741 கிராம ஊராட்சிகளில் உள்ள 12095 குக்கிராமங்களில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆணைகளும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

3. 2015–2016–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மற்றவைகளுடன் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தினை தொடர்ந்து நிறைவேற்றுவதற்காக 2015–2016–ஆம் ஆண்டிற்கு ரூ.750 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

4. மேற்குறிப்பிடப்பட்டதற்கிணங்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் 2015–2016–ம் ஆண்டிற்கான தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தினை 3,013 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 8,268 குக்கிராமங்களில் செயல்படுத்துவதற்குத் தேவையான வரைவு வழிகாட்டு நெறிமுறைகளுடன் உரிய செயற்குறிப்பினை அனுப்பி, இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்து உரிய ஆணைகள் வெளியிடுமாறு அரசைக் கோரியுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகவும், விரிவாகவும் பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக்கொள்வதென முடிவு செய்து அதன்படி, பின்வருமாறு ஆணையிடுகிறது:–

(i) 2015–2016–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரூ.750 கோடி (எழுநூற்று ஐம்பது கோடி ரூபாய் மட்டும்) கீழ்க்கண்டவாறு நிர்வாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| (a) | மாநில நிதியிலிருந்து | – ரூ.332.29 கோடி |
| (b) | அடிப்படை உட்கட்டமைப்பு தேவைகளை நிறைவு செய்து கொடுப்பதற்கான நிதியிலிருந்து 50 % | – ரூ.261.10 கோடி |
| (c) | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியிலிருந்து 6ல் 1 பங்கு | – ரூ.156.61 கோடி |
| | மொத்தம் | – ரூ.750.00 கோடி |

(ii) மேற்குறிப்பிடப்பட்ட நிர்வாக ஒதுக்கீட்டில், மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 83.0725 கோடி (ரூபாய் எண்பத்து மூன்று கோடியே ஏழு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு தேவைகளை நிறைவு செய்து கொடுப்பதற்கான நிதியிலிருந்து ரூ.65.275 கோடி (அறுபத்தைந்து கோடியே இருபத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்), ஆக மொத்தம் ரூ.148.3475 கோடி (நூற்று நாற்பத்தெட்டு கோடி முப்பத்து நாலு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) 2015–2016 ஆம் ஆண்டில்

தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக முதலில் விடுவிக்கப்படுகிறது.

(iii) தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தினை **2015–2016–**ம் ஆண்டில் செயல்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

**6.** மேலே பத்தி 5 (ii)–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்:-

**4515 – 00** – ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – **789** – ஆதி திராவிட வகுப்பினருக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II - மாநிலத் திட்டம் – JE – தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் – **16** பெரும் பணிகள்.

(த.தொ.கு **4515 00 789** JE **1600**) ரூ.**17,44,52,250/–**

**4515 – 00** – ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – **796** – பழங்குடியினர் பகுதிக்கான துணைத் திட்டம் – பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட பணிகள்–II மாநிலத் திட்டம் – JD – தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் – **16** பெரும் பணிகள்.

(த.தொ.கு **4515 00 796** JD **1607**) ரூ.**83,07,250/–**

**4515 – 00** – ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு **800** – ஏனைய செலவினங்கள் – பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட பணிகள்–II மாநிலத் திட்டம் – JX – தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் – **16** பெரும் பணிகள்.

(த.தொ.கு **4515 00 800** JX **1606**) ரூ.**64,79,65,500/–**

**3604 – 00** – உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் – **198** கிராம ஊராட்சிகளுக்கு உதவி – I. திட்டத்தில் சேராதது – AC ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய அடிப்படை கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்து கொடுப்பதற்கான நிதி – **09** உதவித் தொகை – **02** மூலதனச் சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை.

(த.தொ.கு **3604 00 198** AC **0923**) ரூ.**65,27,50,000/–**

ரூ.**148,34,75,000/–**

ஊரகப் பகுதிகளுக்கான முன்னுரிமைத் திட்டங்களுக்கு ரூ.156.61 கோடி (ரூபாய் நூற்று ஐம்பத்தாறு கோடியே அறுபத்தோரு லட்சம் மட்டும்) தொகை ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியிலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் செலவிடப்பட வேண்டும்.

7. மேலே பத்தி 5 (ii)–ல், ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று மாவட்டங்களுக்கு விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் 2015–2016–ஆம் ஆண்டில் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்ட செயல்பாடு குறித்த முன்னேற்ற அறிக்கையினை அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண்.24788/நிதி (ஊ.வ) / 2015, நாள் 28.04.2015–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி,
அரசு செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
முதன்மை கணக்கு அலுவலர், சென்னை–6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்

மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள்
மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ/FC IV) துறை, சென்னை– 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா–1) துறை, சென்னை–9.
(மாநில நிதிக் குழுவின் நிதி ஒதுக்கத்திற்கு தொடர் நடவடிக்கைக்காக)
தேசிய தகவல் மையம், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## அரசாணை (நிலை) எண்.70, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்(மா.அ.தி.1) துறை

## நாள் 29.04.2015.

## இணைப்பு

## தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் 2015–16–ஆம் ஆண்டு செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

### 1. முன்னுரை

மக்களுக்கு சிறந்த முறையில் சேவை அளிப்பதற்காக வறுமை ஒழிப்பு, சிறந்த வாழ்வாதார வாய்ப்பை வழங்குதல், அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து திட்டங்களை அமல்படுத்துவதை உறுதி செய்வதே ஊரக வளர்ச்சியின் முக்கிய நோக்கமாகும். பொதுவாக திட்ட செயலாக்கம் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு ''கிராம ஊராட்சி'' யினையே அடிப்படை வளர்ச்சிக்கான அலகாகக் கொண்டு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும். ஊரக வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தற்போதுள்ள நடைமுறையைவிட ஒரு படி மேலாக, திட்டமிடுதல், நிதியளித்தல் மற்றும் திட்ட செயலாக்கம் ஆகியவற்றினை கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்கள் அலகாக எடுத்துத் திட்டங்களைச் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்தது. அனைத்து குக்கிராமங்களுக்கும் சமமான நிதி ஆதாரம் வழங்கும் பொருட்டும், வள ஆதாரங்களை பகிர்ந்தளிப்பதில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் களையும் நோக்கிலும், குறைந்தபட்ச அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்து குக்கிராமங்களுக்கும் சென்றடையும் வகையிலும் ஒரு முன்னோடித் திட்டமாக **'தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்'** என்னும் புதிய திட்டம் 2011–12ஆம் ஆண்டு முதல் இவ்வரசால் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ***தேசிய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தில் மட்டும் தான் குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்டு முதன்முறையாக, இம்முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.***

மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், சராசரியாக ஒரு கிராம ஊராட்சியில் 6 குக்கிராமங்கள் உள்ளன. எனினும், கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 37 குக்கிராமங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 3 குக்கிராமங்களும் உள்ளன. பல்வேறு எண்ணிக்கையிலான குக்கிராமங்களைக் கொண்ட கிராம ஊராட்சிகளுக்குச் சம அளவிலான நிதி ஒதுக்கீடு செய்வது வளர்ச்சி நிலையில் வேறுபாட்டினையும், பொதுச் சொத்துகள் உருவாக்குவதில் மாறுபாட்டினையும் முன்னேற்றத்தில் ஏற்ற தாழ்வுகளையும் உருவாக்கியது. அரசின் வசதிகள் அடிமட்ட அளவிற்கு சென்றடையும் நோக்கில் ஒரு முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்படும் தாய் திட்டம், ஒரு வரமாக அமைந்துள்ளது.

### 2. கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்

தமிழகத்தில், (சென்னை நீங்கலாக) 31 மாவட்டங்களில் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள சில ஊராட்சிகளில் மக்கள் தொகை 500க்குக் குறைவாகவும், சில ஊராட்சிகளில் மக்கள் தொகை 10,000க்கு அதிகமாகவும் உள்ளது.

குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்.**

| வ.எண். | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 5க்கும் கீழ் | 6,241 |
| 2. | 5–15 | 5,434 |
| 3. | 16–25 | 637 |
| 4. | 26 – 50 | 189 |
| 5. | 50க்கு மேல் | 23 |
| மொத்தம் | | 12,524 |

**3. நிதி ஒதுக்கீடு:**

குக்கிராமங்களின் எண்ணிக்கையையும், ஊராட்சியில் உள்ள மக்கள் தொகையையும் ஒப்புநோக்கும் போது, குக்கிராமங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மக்கள் தொகையும் கூடுகிறது என்பது தெளிவாகிறது. அதிகமாக குக்கிராமங்களைக் கொண்டுள்ள கிராம ஊராட்சிகளின் தேவைகளும் அதிகமான அளவில் இருக்கும். இதைக் கருத்திற்கொண்டு நிதி ஒதுக்கீட்டிற்காக குக்கிராமங்களின் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் 5 பிரிவுகளாக வகைபடுத்தப்பட்டுள்ளன. கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகை 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பினை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, அதிக அளவிலான மக்கள் தொகையும், அதிக குக்கிராமங்களும் கொண்டுள்ள கிராம ஊராட்சிகள் அதிக அளவிலான நிதி ஒதுக்கீட்டினைப் பெறுகின்றன. பின்வரும் அட்டவணை இதனை தெளிவாக்குகிறது.

**"தாய்" திட்டத்திற்குத் தேவைப்படும் நிதி**

| வ. எண் | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | மொத்த மக்கள் தொகை (2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி) | ஒரு ஊராட்சிக்கான சராசரி மக்கள் தொகை | ஒரு ஊராட்சிக்கான ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குறைந்தபட்ச அடிப்படை மானியம் | கூடுதல் நிதி | மொத்த நிதி |
| 1. | 5க்கும் கீழ் | 6,241 | 1,25,34,047 | 2,008 | 20 | 0 | 20 |
| 2. | 5–15 | 5,434 | 1,73,92,688 | 3,201 | 20 | 10 | 30 |
| 3. | 16– 25 | 637 | 35,53,429 | 5,578 | 20 | 20 | 40 |
| 4. | 26–50 | 189 | 15,57,132, | 8,239 | 20 | 30 | 50 |
| 5. | 50க்கு மேல் | 23* | 3,07,557 | 13,372 | 20 | 30 | 50 |
| மொத்தம் | | 12,524 | 3,53,44,853 | 2,822 | –– | –– | –– |

* 23 கிராம ஊராட்சிகளில் 50 மற்றும் அதற்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. இக்குக்கிராமங்களுக்கு தேவைப்படும் பணிகளைக் கண்டறிந்து 2014–15ம் ஆண்டில் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பிற திட்டங்களின் மூலம் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டுள்ளது.

2011–12ம் ஆண்டில் ரூ.680 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2012–13ம் ஆண்டு முதல் ஊரக குக்கிராமங்ளில் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பை நிறைவு செய்வதில் உள்ள இடைவெளிகளை (Infrastructural Gaps) நிரப்பிடும் நோக்கில் இத்திட்டத்திற்கான நிதியை ரூ.750.00 கோடியாக இந்த அரசு உயர்த்தியது. மேற்படி கூடுதல் நிதி ஒதுக்கீடான ரூ.70.00 கோடி தாய் திட்ட கிராமங்கள் மற்றும் அவற்றிற்கு அருகில் உள்ள கிராம இணைப்புச் சாலைகளை மேம்படுத்த ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

*ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மற்றும் மாவட்டத்திலுள்ள கிராம ஊராட்சி/ குக்கிராமங்களுக்கு நிதி பகிர்ந்தளிப்பது தொடர்பாக அரசாணை (1டி) எண்.622, ஊ.வ (ம) ஊராட்சி (மாஅதி–1) துறை, நாள் 22.12.2011–ல் வெளியிடப்பட்ட விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.*

**4. திட்ட செயலாக்கம்**

இத்திட்டம் 2011–12ம் ஆண்டு முதல் 2015–16ம் ஆண்டு வரை ஐந்து கட்டங்களாக செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது. முதற்கட்டமாக, 2011–12ம் ஆண்டில் 2,020 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 25,335 குக்கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு ரூ.680 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2012–13ம் ஆண்டில் 2,250 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 18,581 குக்கிராமங்களில் ரூ.750 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2013–14ம் ஆண்டில் 2,500 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 15,115 குக்கிராமங்களில் ரூ.750 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதேபோல், 2014–15ம் ஆண்டில் 2,741 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 12,095 குக்கிராமங்களில் ரூ.750 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2015–16ம் ஆண்டில் 3,013 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 8,268 குக்கிராமங்களில் ரூ.750 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. ஆகவே, 2015–16ஆம் ஆண்டின் இறுதியில் 12,524 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 79,394 அனைத்து குக்கிராமங்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்படும்.

**5. திட்டக் கூறுகள்**

"தாய்" திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள் பின்வரும் அட்டவணையில் உள்ளபடி மூன்று விதமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | குறைந்த பட்ச அடிப்படை தேவைகள் | கூடுதல் தேவைகள் | இதர பணிகள் |
|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகம் | அங்கன்வாடி மையம் | அனுமதிக்கப்பட்ட இதர பணிகள் |
| 2 | தெருவிளக்குகள் | பொது விநியோகக் கடை | |
| 3 | சாலைகள் | சுய உதவிக்குழு கட்டடம் | |
| 4 | சுடுகாடு / இடுகாடு | கதிரடிக்கும் களம் | |
| 5 | சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் | விளையாட்டு மைதானம் | |

கிராம ஊராட்சியிலுள்ள ஒவ்வொரு குக்கிராமத்திலும் மேற்கண்ட 5 அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்த பின்னர் அவசியத்தின் அடிப்படையில் கூடுதல் தேவைகளுக்கான பணிகளை மேற்கொள்ளலாம். குறைந்தபட்ச அடிப்படைத்தேவைகள் மற்றும் கூடுதல் தேவைப்பணிகளைத் தவிர மற்ற அத்தியாவசிய பணிகளை இதர பணிகளின்கீழ் மேற்கொள்ளலாம்.

### 5.1 குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளின் கீழ் வரும் பணிகள்:

### 5.1.1 குடிநீர் விநியோகம்:

- கிராம ஊராட்சியிலுள்ள குடியிருப்புகளில் தனி நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் விநியோகிக்கப்படும் குக்கிராமங்களை கண்டறிந்து அவற்றை மேம்படுத்தும் வகையில் மின் விசை இறைப்பான், குடிநீர் குழாய் விரிவாக்கம், தற்போதுள்ள குடிநீர் வழங்கும் நீராதாரத்தினைப் பெருக்குதல் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

*குறிப்பு – தெருக்குழாய் இணைப்பு வழங்க குழாய் நீட்டிப்பு செய்யும் பணியினை கிராம ஊராட்சி பொது நிதி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதியினை ஒருங்கிணைப்பதன் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.*

### 5.1.2 தெரு விளக்குகள்:

- தேவைகளின் அடிப்படையில் புதிய அதிநவீன வினைதிறமிக்க அடர்குறு (LED) (தானியங்கி முறையில் ஒளிர்தல் மற்றும் அணைதல்) தெரு விளக்குகள் அமைக்கலாம்.
- புதிய குடியிருப்புகள், விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள், இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகள் அடங்கிய குடியிருப்புகள், சுடுகாடு/இடுகாட்டிற்கான பாதை போன்ற இடங்களில் அதிநவீன வினைதிறமிக்க அடர்குறு (LED) (தானியங்கி முறையில் ஒளிர்தல் மற்றும் அணைதல்) தெரு விளக்குகள் முன்னுரிமை அடிப்படையில் அமைக்கலாம்.
- ஏற்கெனவே தெருவிளக்குகள் உள்ள பகுதிகளில் தேவை, நிறைவடையாத இடங்களில் கூடுதல் தெருவிளக்குகள் அமைக்கலாம்.
- தொலைதூரத்திலுள்ள அல்லது ஒதுக்குப்புறமாக உள்ள குக்கிராமங்களில் நுண்ணறி முறையிலான (தானியங்கி) சூரிய சக்தி ஒளி அடர்குறு விளக்குகள் அமைக்கலாம்.
- தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மின் கம்பங்களில் தேவைப்படும் பட்சத்தில், தெருவிளக்கு உபகரணங்களை பொருத்தலாம். இத்தகைய பணிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் வைப்புப் பணிகளாக மேற்கொள்ளலாம்.

*குறிப்பு –*

- *தெருவிளக்குகள் அமைத்தல் பணிகளை பொறுத்தவரை மக்கள் தொகை அதிகமாக உள்ள குக்கிராமங்களில் மின்கம்பம் புதிதாக அமைக்கப்பட வேண்டிய பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.*
- *ஏற்கெனவே மும்முனை மின் இணைப்பு இருந்து அம் மின்கம்பத்தில் புதியதாக மின்விளக்கு அமைக்கும் பணி ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி பொது நிதியிலிருந்து ஒருங்கிணைத்து மேற்கொள்ளலாம்.*
- *ஏற்கெனவே உள்ள விளக்குகளுக்கு உபகரணங்கள் மாற்றப்படும் (replacements) நிலையிலுள்ள பணிகள் (replacements of starter, choke, tubelight, etc.,) **2015–16** தாய் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளக் கூடாது.*
- *சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தெருவிளக்குகளை சூரிய சக்தி ஒளிவிளக்காக மாற்றும் திட்டத்தையும் இத்திட்டத்தில் ஒருங்கிணைத்து தெருவிளக்கு தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.*

### 5.1.3 சாலைகள்:

இவ்வகைப்பாட்டின்கீழ் கிராமத்திலுள்ள உட்புற தெருக்கள் மற்றும் இணைப்புச் சாலைகள் என இருவகைப் பணிகளையும் மேற்கொள்ளலாம்.

#### 5.1.3.1 சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்:

கிராமத்திற்குள் உள்ள உட்புறத் தெருக்களைப் பொறுத்தவரை, சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை பணிகளை கீழ்க்காணும் நெறிமுறைகளுக்குட்பட்டு மேற்கொள்ளலாம்.

1. நடை பாதையின் இருபுறமும் குடியிருப்புப் பகுதிகள் உள்ள தெருக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

2. மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கும் தாழ்வான இடங்களில் உள்ள தெருக்கள் மற்றும் சந்துகளுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

3. ஒரு தெருவின் ஒரு பகுதி சிமெண்ட் கான்கிரீட் பாதையாக்கப்பட்டு மறு பகுதி அமைக்கப்படாதிருந்தால் அவ்வாறு சிமெண்ட் கான்கிரீட் அமைக்கப்படாத அம்மறு பகுதி முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

4. சிமெண்ட் கான்கிரீட் பாதை அமைக்கும் முன்னர் தெருவின் நடுவே மின்வாரிய/ தொலைபேசி கம்பங்கள் இருந்தால், அவற்றை தெருக்களின் ஓரத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

5. பணிகளை பகுதி, பகுதியாக மேற்கொள்வது தவிர்க்கப்பட வேண்டும்.

*குறிப்பு – சிமெண்ட் கான்கிரீட் சாலைப் பணிகள் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைப்பணிகளான குடிநீர் வழங்கல், தெரு விளக்கு அமைத்தல், சுடுகாடு / இடுகாட்டுப்பாதை அமைத்தல், சுடுகாடு மேம்பாட்டுப் பணிகள் மற்றும் இணைப்பு சாலை அமைத்தல் போன்ற மிகவும் அத்தியாவசிய பணிகளை பூர்த்தி செய்த பின்னரே மேற்கொள்ள வேண்டும். சிமெண்ட் கான்கிரிட் பணிகள் அதிக*

*அளவில் தேவைப்படும் பட்சத்தில் ஊராட்சி பொது நிதி, ஊராட்சி ஒன்றிய பொது நிதி, மாவட்ட ஊராட்சி பொது நிதி அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியினை ஒருங்கிணைப்பதின் மூலம் மேற்கொள்ளலாம்.*

**சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை அமைக்கும்போது பின்பற்றப்படவேண்டிய வடிவமைப்பின் அளவுகோல்:**

1. சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை அமைக்கும்போது அத்தெருவில் உள்ள வீடுகளின் தரைமட்டத்தினை கணக்கில் கொண்டு, அந்நடைபாதையின் மேற்பரப்பிலிருந்து மழைத் தண்ணீர் வீடுகளுக்குள் செல்லாதவாறு அமைக்கப்பட வேண்டும்.

2. சிமெண்ட் கான்கிரீட் நடைபாதையின் இருபுறங்களிலும் செஞ்சரள் நிரப்பப்பட வேண்டும். இதன்மூலம் இருபுறங்களிலும் தண்ணீர் தேங்குவதை தடுக்கவும், கான்கிரீட் நடைபாதையின் ஓரங்கள் உடைபடுவதை தவிர்க்கவும் முடியும். மேலும், இரு சக்கர வாகனங்கள் மற்றும் நடைபாதைவாசிகள் வழுக்கி விழுவதில் இருந்தும் தடுக்கலாம். மழைநீர் இருபுறமும் வழிந்தோடும் வகையில் நடைபாதையின் மையமானது ஓரளவுக்கு உயரமாக அமைக்கப்படலாம்.

3. சிமெண்ட் கான்கிரீட் நடைபாதையின் குறுக்கே கால்வாய்கள் அமைக்க கட்டாயம் வழிவகை செய்ய வேண்டும். இதன்மூலம் நடைபாதையின் இருபுறமும் நீர் தேங்குவதை தவிர்க்கலாம்.

4. தேவையான இடங்களில் குழாய்கள் அமைக்கப்பட்டு குழாய் போன்ற வெற்று இணைப்புகள் ஏற்படுத்த வழிவகை செய்யலாம்.

5. சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை அமைக்கும்போது ஒவ்வொரு 5 மீட்டருக்கும் இடையில் Bituminus pad கொண்டு விரிவாக்க இணைப்புகள் ஏற்படுத்த வேண்டும்.

**5.1.3.2 சாலைகள் :**

இணைப்புச் சாலைகளைப் பொறுத்தவரை கீழ்க்கண்ட இரண்டு படிநிலைகளில் பணிகள் தேர்வு செய்யப்பட வேண்டும்:—

1. வழக்கமான நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படும் இணைப்புச் சாலைகளை ஊராட்சியிலுள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

2. சிறப்புச் சாலைகளுக்கான கூடுதல் நிதி ரூ.70.00 கோடியிலிருந்து சிறப்புச் சாலைகள் தேர்ந்தெடுக்கப்படும்.

**1. இணைப்பு சாலைகள்**

a) கிராம ஊராட்சி சாலைப் பணிகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

b) இணைப்புச் சாலைகள் அமைக்கும்போது பின்வரும் சாலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்

i) பேருந்துகள் செல்லும் சாலைகள்

ii) கற்சாலைகளை தார் சாலைகளாக மேம்படுத்துதல்

iii) ஒரு கிராம ஊராட்சியில் இரண்டு அல்லது அதற்கு மேல் உள்ள குக்கிராமங்களை இணைத்து சாலை அமைத்தல் மற்றும் ஒரு குக்கிராமத்திலுள்ள இரு இடங்களை இணைக்கும் சாலைப்பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

iv) மண்சாலைகள், கப்பிசாலை, கற்சாலைகளை தார்சாலை நிலைக்கு மேம்படுத்துல்.

C) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் புதிய சாலைகள் அமைக்கப்பட போதிய வழிவகை உள்ளதால், இத்திட்டத்தின்கீழ் புதிய சாலைகள் எடுக்கப்பட வேண்டியதில்லை. இருப்பினும், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட மண்சாலையை தார்சாலையாக இத்திட்டத்தின்கீழ் மேம்படுத்தலாம்.

d) நிதி நிலையை பொறுத்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளை இணைக்கும் அல்லது அவற்றின் வழியே செல்லும் இணைப்பு சாலைகளை எடுத்து செய்யலாம். ஆனால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சாலைப்பணிகளை மீண்டும் எடுத்துச் செய்யாமல் இருப்பதை உறுதிப்படுத்திட வேண்டும்.

e) முடிந்தவரை முழுநீள அளவிலான சாலைப் பணிகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டுமேயன்றி துண்டு துண்டாக பணிகளை (no piecemeal structures) மேற்கொள்ளக்கூடாது.

<u>2. சிறப்புச் சாலைகள்</u>

மண், சரளை மற்றும் கற் சாலைகளை தார் சாலைகளாக மேம்பாடு செய்வதற்கு, ‘‘தாய்த்திட்டம்–2015–16ம்’’ ஆண்டில் இதற்கென பிரத்தியேகமாக ரூ70.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அனுமதிக்கப்பட்ட பணிகள்</u>

1. மண், சரளை மற்றும் கற்சாலைகளை தார் சாலையாக மாற்றும் சாலைப்பணிகள் மட்டுமே தாய் திட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏற்கனவே உள்ள தார் சாலைகளை புதுப்பிக்கும் பணிகளை மேற்கொள்ளக் கூடாது.

2. இத்தகைய, சாலைகள் மேம்பாடு செய்யும் பணிகளை தாய்த் திட்டம் 2015–16ம் ஆண்டின் கிராம ஊராட்சிகளில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்காக தாய்த் திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சிறப்புச் சாலை அமைக்கும் பணியினை எடுக்கத் தேவையில்லை, மாறாக எங்கெல்லாம் மேம்பாடு அவசியம் என கருதப்படுகிறதோ, அங்கு சிறப்புச் சாலை பணிகளை மேற்கொள்ளலாம்.

## முன்னுரிமையளிக்க வேண்டிய பணிகள்

சாலைகளை எடுத்து மேம்பாடு செய்யும் பொழுது கீழ்க்கண்டவாறு முன்னுரிமை அளித்து பணிகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(i) பேருந்து செல்லும் சாலைகள்

(ii) தாய் திட்ட கிராமங்களில் உள்ள குக்கிராமங்களை அதன் அருகில் உள்ள மற்றொரு குக்கிராமங்களை அல்லது பிரதான சாலையோடு இணைக்கும் சாலைப் பணிகள்.

(iii) மக்கள் அதிகம் பயன்படுத்தும் பிற முக்கிய இணைப்புச் சாலைகள் அதாவது வியாபாரத் தளங்கள், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகள் ஆகியவற்றை இணைக்கும் முக்கிய சாலைகளை எடுத்துக் கொள்ளலாம்.

**கடைப்பிடிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள்:**

(i) சாலைப் பணிகளை பொறுத்தவரை முழுவதுமாகவோ அல்லது முழுநீள அளவிலான சாலையையோ மேம்பாட்டிற்கு மேற்கொள்ள வேண்டுமேயன்றி துண்டு துண்டாக பணிகளை (no piecemeal structures) மேற்கொள்ளக்கூடாது.

(ii) சாலைப் பணிகளை எடுத்து மேம்படுத்தும் பொழுது அச்சாலைகள் கண்டிப்பாக ஊரக வளர்ச்சி இயக்ககத்திற்கு அளிக்கப்பட்ட புள்ளி விவரப்பட்டியலில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) மேம்படுத்தப்பட வேண்டிய சாலைப் பணிகளுக்கு என பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட குறியீடு எண் குறிப்பிடல் வேண்டும். அதேபோல், பேருந்து செல்லும் சாலைப் பணியாக இருப்பின், பேருந்து செல்லும் வழித்தடத்திற்கென அளிக்கப்பட்ட பிரத்தியேக எண்ணை குறிப்பிடல் வேண்டும்.

(iv) தேர்வு செய்யப்பட்ட சாலைகளின் பெயர்கள் புதுப்பிக்கப்பட்ட, சாலைகள் பட்டியலின்படி இருக்க வேண்டும்.

(v) தார் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு, தரமான பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும். பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தும் தொழில் நுட்ப முறையினை தேசிய ஊரக சாலைகள் முன்னேற்ற கழகம் (NRRDA), புது தில்லி மற்றும் அண்ணா பல்கலைக் கழகம் மூலமாக மதுரை தியாகராயார் பொறியல் கல்லூரியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

(vi) பிளாஸ்டிக் சாலைகள் அமைப்பதற்காக, தேசிய ஊரக சாலைகள் முன்னேற்ற கழகத்தினால் (NRRDA) வரையறுக்கப்பட்ட, முறை மற்றும் விவர குறிப்புகளை, சுற்றுப்புறம் மற்றும் சுகாதாரத்தினைப் பேணும் வகையில் பின்பற்றி கடைபிடித்தல் வேண்டும்.

## நிதி ஒதுக்கீடு

ஒவ்வொரு மாவட்டத்திலும் சாலைகளின் மொத்த நீளம் மற்றும் அவற்றில் மேம்படுத்தப்பட வேண்டிய சாலைகளின் நீளம் இன்றைய நிலையில் உள்ள விபரங்கள் அடங்கிய புள்ளிவிவரப் பட்டியலின் அடிப்படையில், நடைமுறையில் உள்ள விதிகளின் படி ஒவ்வொரு மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## தேவை கணக்கிடுதல்

மாவட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில், மேம்படுத்தப்பட வேண்டிய சாலைகளை சம்பந்தப்பட்ட வட்டாரத்தின் உதவிப்பொறியாளர் கண்டறிந்து, அதை உப கோட்ட உதவி செயற் பொறியாளரால் (ஊரக வளர்ச்சி) சிறப்பாய்வு செய்யப்பட வேண்டும். அங்ஙனம் மேம்பாடு செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைகளின் பட்டியல், செயற்பொறியாளர் (ஊ.வ) மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆகியோரால் மீளாய்வு செய்த பின்னர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திற்கு அனுப்ப வேண்டும். ஊரக வளர்ச்சி இயக்ககத்திலுள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள் பிரேரணைகளை ஆய்வுசெய்து ஒப்புதல் வழங்கியபின், மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்வாக அனுமதி வழங்குவார்கள்.

## 5.1.4 சுடுகாடு/ இடுகாடு

இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட இடுகாடு / சுடுகாடுகள் ஒவ்வொன்றிற்கும் கீழ்கண்ட வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும்.

**(a) அணுகு சாலைகள்:** தேவையின் அடிப்படையில் 3 மீட்டர் அகலமுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை, இடுகாடாக இருப்பின் அதன் நுழைவாயில் வரையிலும், சுடுகாடாக இருப்பின் தகன மேடை வரையிலும், தேவையான நீளத்திற்கு அமைக்கலாம். சிமெண்ட் கான்கிரீட் நடைபாதையின் உயரம் நடப்பிலுள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் விவரக்குறிப்பின் படி அமைவதை உறுதி செய்தல் வேண்டும்.

**(b) சுற்றுச் சுவர்:** இத்திட்டத்தில், சுடுகாடு/இடுகாட்டினை சுற்றி செங்கற்களைக் கொண்டு கதவுகள் இன்றி சுற்றுச் சுவர் கட்டும் பணியினை மேற்கொள்ளலாம். சுற்றளவு நீளம் மிகவும் அதிகமாக இருக்குமானால், பிரதான வாயில் அமைந்துள்ள பக்கத்தில் மட்டுமாவது மதிற்சுவர் கட்டும் பணி கட்டாயமாக எடுத்துச் செய்திட வேண்டும். மற்றும் பிற மூலைகளில் சிமெண்ட் கான்கிரிட் தூண்கள் **(pre cast cement concrete pillars)** உறுதியான அடிதளத்துடன் அமைக்கப்பட வேண்டும். மேலும் இடுகாட்டை சுற்றியுள்ள மற்ற பகுதிகளில் போதிய இடைவெளியுடன் தூண்கள் எல்லைக் கோடாக அமைத்திடலாம். ஒருபோதும் முள்கம்பி/சங்கிலி இணைப்பு வேலி அமைத்தல் கூடாது.

**(c) சுடுகாட்டுக் கொட்டகை:** இந்த சுடுகாட்டுக் கொட்டகை கீழ்க்கண்ட எடுத்துக்காட்டான அளவு மற்றும் பரிமாணங்களுடன் அமைக்கப்படவேண்டும்.

❖ சுடுகாட்டுக் கொட்டகை 7 மீ x 6 மீ என்ற அளவிலும் நடைமேடை 4 மீ x 3 மீ என்ற அளவிலும் மற்றும் நடைமேடை தரைமட்டத்திலிருந்து 45 செ.மீ அளவிற்கு உயரமாக இருக்க வேண்டும்.

- ❖ 4 தூண்களுடன் புகைபோக்கி வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் கூரை மட்டுமே அமைத்தல் வேண்டும். G.I தகரம்/கல்நார் தகடு போன்றவற்றால் கூரை அமைப்பது முற்றிலுமாக தடை செய்யப்படுகிறது.

- ❖ இந்த சுடுகாட்டு மேடையின் தரைத்தளம் மணல் /மண் /தீயினால் பாதிக்கப்படாத செங்கற்களை கொண்டு அமைக்கப்படலாம்.

- ❖ இந்த எரிமேடையானது 4 அடி அகல சுற்று நடைபாதையுடன் அமைக்கப்பட வேண்டும்.

- ❖ எரிக்கும் வழக்கம் இல்லாதிருக்கும் கிராமங்களில் இதனை காத்திருப்புக் கூடமாக மாற்றிக் கொள்ளலாம்.

**(d) தண்ணீர் வசதி:** சுடுகாடு மற்றும் இடுகாடுகளில் கைப்பம்புகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். இடுகாடு/சுடுகாட்டில் குழாய் நீட்டிப்பு செய்து குழாய் அமைத்தல் மற்றும் குடிநீர் விநியோக குழாய் அமைப்பதை தவிர்க்க வேண்டும்.

**(e) விளக்கு வசதி:** தேவையின் அடிப்படையில் விளக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படலாம். கிராமங்களிலிருந்து நெடுந்தொலைவில் இருக்கும் சுடுகாடு/இடுகாடுகளில் சூரிய ஒளி விளக்குகள் மற்றும் அதிநவீன வினைதிறமிக்க அடர்குறு (LED) விளக்குகள் ஏற்படுத்தி கொடுக்கலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள வசதிகளில் ஏதாவது ஏற்கனவே அமைக்கப்பட்டு இருந்தால், அவ்வசதி(கள்) மீண்டும் செய்யப்பட வேண்டிய தேவையில்லை.

*குறிப்பு – சுடுகாடு / இடுகாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து பணிகளில் மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படும் பணிகளை கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு தாய் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இதர பணிகளை மற்ற திட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்பதன் மூலம் நிறைவேற்ற வேண்டும்.*

**5.1.5 சுடுகாடு/இடுகாடு பாதை அமைத்தல் :**

இது இத்திட்டத்தின் மிக முக்கிய கூறாகும்.

i) இடுகாடு/சுடுகாட்டிற்கு செல்ல அணுகு சாலைவசதி இல்லாமல் இருந்தால், ஆதி திராவிடர் நலநிதி அல்லது பிற்படுத்தப்பட்டோர் நலநிதியினை பயன்படுத்தி நிலம் கையகப்படுத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள் இப்பணிக்கு தலையாய முக்கியத்துவம் அளிக்க வேண்டும். நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுற்றவுடன் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்ட நிதியினை பயன்படுத்தி தார்ச்சாலை அமைக்கப்பட வேண்டும்.

ii) ஏற்கனவே நடைபாதை வசதிகள் இருக்குமேயானால் மேற்படி சாலையின் தேவைக்கு ஏற்ப சாலை மேம்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(a) மண்சாலை/சரளை சாலை/கற்சாலையினை தார்சாலையாக மேம்பாடு செய்யலாம்.

(b) ஏற்கனவே உள்ள தார்சாலை பழுது அடைந்து இருந்தால் அதனை புதுப்பிக்கும் பணியினை மேற்கொள்ளலாம்.

*குறிப்பு –*

*சுடுகாடு பாதை அமைக்கும் பணியின் தேவை கணக்கெடுப்பின் மூலம் கண்டறியப்படும் நிலையில் அத்தகைய பணிகளை நிதி இருப்பின் அடிப்படையில் நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்பட முன்னுரிமை வழங்க வேண்டும்.*

*ஒரு குக்கிராமத்திற்கு, தண்ணீர் வசதி, தெருவிளக்குகள், சாலைகள், சுடுகாடு/இடுகாடு, சுடுகாடு/இடுகாட்டிற்கு பாதை ஆகிய மிகவும் அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகள் என்பதால், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் முடிவடையும்போது மேற்குறிப்பிட்ட வசதிகள் முழுதும் அனைத்துக் குக்கிராமங்களிலும் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்துதல் வேண்டும். இவ்வசதிகள் அனைத்தும் செய்து முடித்திட வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் (ஊவ) மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆகியோரைச் சாரும். இது தொடர்பாக குறைபாடுகள் ஏதும் ஏற்படின் மேற்படி அலுவலர்கள் முழுப் பொறுப்பாக்கப்படுவார்கள்.*

**5.2 கூடுதல் தேவைகள்**

**5.2.1. அங்கன்வாடி கட்டடம்**

தனியார் கட்டடங்களில் வாடகைக்கு இயங்கி வரும் அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடம் கட்டித் தரலாம். அத்தகைய புதிய கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு வசதி செய்து தரப்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

**5.2.2. பொது விநியோகக் கடை**

சொந்த கட்டடம் இல்லாத முழுநேர பொது விநியோக கடைக்கு புதிய கட்டடம் மழை நீர் சேகரிப்பு வசதியுடன் கட்டித் தரலாம்.

**5.2.3. சுய உதவிக்குழு கட்டிடம்**

2001–2006ம் ஆண்டுகளில் ஒரு ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக்குழு கட்டடம் வீதம் சுயஉதவிக் குழு கட்டடம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து குக்கிராமங்களுக்கும் சுயஉதவிக்குழு கட்டடம் தேவைப்படாது. இருப்பினும் 20க்கும் மேற்பட்ட சுயஉதவிக்குழுக்கள் இருக்கும் பட்சத்தில், தேவையின் அடிப்படையில் தகுதியான நிலம் இருப்பின் கூடுதல் சுயஉதவிக்குழு கட்டடம் கட்டலாம்.

**5.2.4. கதிர் அடிக்கும் களம்**

2001–2006ம் ஆண்டுகளில் ஒரு ஊராட்சிக்கு ஒரு கதிர் அடிக்கும் களம் வீதம் கதிர் அடிக்கும் களம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து குக்கிராமங்களிலும் கதிர் அடிக்கும் களம் தேவைப்படாது. எனினும், எந்த குக்கிராமத்தில் கதிர்

அடிக்கும் களம் விடுபட்டு உள்ளதோ அங்கு தேவையின் அடிப்படையில் கதிர் அடிக்கும் களம் அமைக்கலாம்.

**5.2.5. விளையாட்டு மைதானம்**

விளையாட்டு மைதானங்கள் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து குக்கிராமங்களுக்கும் உடனடி தேவை ஏற்படாது. ஒரு குக்கிராமத்தில் இளைஞர் குழு செயல்பாட்டில் இருந்து விளையாட்டு மைதானம் இல்லாது இருக்குமானால் புதிய விளையாட்டு மைதானம் அமைக்கலாம். நிலத்தினை சமன்படுத்தி மண் இறுக்கம் செய்து விளையாட்டு மைதானம் அமைக்கலாம்.

❖ விளையாட்டிற்கு தேவையான பயன்பாட்டு பொருட்களை தன்னிறைவுத் திட்டம் (SSS) மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் செயல்படுத்தப்படும் பஞ்சாயத்து யுவ கிரீட அவுர் கேல் அபியான் ( 'பைக்கா' PYKKA) திட்டத்தின் மூலம் கொள்முதல் செய்யலாம்.

❖ விளையாட்டுப் பொருட்களை பாதுகாக்க கட்டடம் தேவைப்படும் பட்சத்தில் ஒரு சிறிய கட்டடம் கட்டிக்கொள்ளலாம்.

**5.3 இதர பணிகள்**

மேற்குறிப்பிட்டுள்ள பட்டியலில் இடம்பெற்றுள்ள பணிகளைத் தவிர இதர பணிகளை இத்தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம்.

**5.4 பணிகளின் முன்னுரிமைப்பட்டியல்**

**2015–16** ஆண்டிற்கான தாய்த் திட்டப் பணிகளை தேர்வு செய்யும் போது கீழ்க்காணும் முன்னுரிமை வரிசை கண்டிப்பாக பின்பற்றப்படுதல் வேண்டும்.

1. குடிநீர் விநியோகம்
2. தெரு விளக்குகள்
3. சுடுகாடு/இடுகாடு செல்ல அணுகு சாலை
4. சுடுகாடு/இடுகாட்டினை மேம்படுத்துதல்
5. சாலைகள்
   - i. தார் சாலைகள்
   - ii. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்

**5.5 எடுக்கக்கூடாத/ தடைசெய்யப்பட்ட பணிகள்:**

தாய் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணிகளை எடுத்துச் செய்யக் கூடாது.

1) பொதுத் துறை நிறுவனங்கள் உட்பட மத்திய, மாநில அரசுத் துறைகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலக கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல். விதி விலக்காக பொது விநியோகக் கடை கட்டடங்கள்.

2) அனைத்து வகையான, புதுப்பித்தல், பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளுதல்.

3) அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

4) அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பிற கல்வி நிறுவனங்களுக்கு எவ்வித பணிகளையும் மேற்கொள்ளுதல்

5) தனிநபர்/குடும்ப பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்

6) அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்

7) மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்

8) நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத்தொகை வழங்குதல்

9) முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகையினை மீளச் செலுத்துதல்.

10) அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்

11) மதவழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள்/குழுக்களுக்கு பயன்பாட்டில் இருக்கும் அல்லது சொந்தமான நிலங்களில் பணிகள்

12) சரளை/கற்சாலைகள் (தார்சாலைகளை அமைக்கும் சாலைப் பணிகளை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்)

13) சோடியம் ஆவி விளக்கு/ உயர் கம்ப மின் விளக்குகள் பொருத்துதல்

**6. கணக்கெடுப்பு மற்றும் அடிப்படைத் தேவைகளை கணக்கீடு செய்தல்**

2015–16ம் ஆண்டிற்கான 3,013 கிராம ஊராட்சிளைச் சேர்ந்த 8,268 குக்கிராமங்களில் தற்போதுள்ள அடிப்படை வசதிகள் மற்றும் தேவைப்படும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை கண்டறிய ஓர் விரிவான கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு அனைத்து புள்ளி விவரங்கள் ஊரக வளர்ச்சித் துறையின் வலைதளத்தில் (www.tnrd.gov.in) உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. தாய் திட்டப் பணிகளை தேர்வு செய்வது/அனுமதி வழங்குவது மேற்படி கணக்கெடுப்பின் அடிப்படையில் செயல்படுத்த வேண்டும்.

**6.1 கணக்கெடுப்பு**

இக்கணக்கெடுப்புப்பணி பின்வரும் 12 படிவங்களுடன் அடிப்படைத் தேவைகளான குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சாலைகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற தேவைகளை குக்கிராம அளவில் கணக்கீடு செய்யும் அளவில் வடிவமைக்கப்பட்டதாகும்.

1. குக்கிராமம் குறித்த அடிப்படை விவரங்கள்
2. குடிநீர் விநியோகம்

(a) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

(b) சிறுமின்விசை இறைப்பான்கள்

(c) தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள்

(d) கைப்பம்புகள்

3. தெருவிளக்குகள்

4. தெருக்கள் மற்றும் சந்துகள்

5. இடுகாடு/சுடுகாடு

6 (அ). அனைத்து அரசு / உள்ளாட்சி கட்டடங்கள் (பள்ளி கட்டடங்கள் நீங்கலாக)

(ஆ). அனைத்து அரசு/உள்ளாட்சி பள்ளிக் கட்டடங்கள்

7. சிறு குளங்கள் மற்றும் ஊரணிகள்

8. விளையாட்டு மைதானங்கள்

9. பேருந்து நிலையங்கள்

10. சந்தைகள்

11. சுய உதவிக்குழுக்கள் குறித்த விவரங்கள்

12 (a). கிராம ஊராட்சி சாலைகள்

(b). ஊராட்சி ஒன்றிய சாலைகள்

**6.2 கணக்கெடுப்புக் குழு**

கிராம ஊராட்சிகளில் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் கீழ்க்காணும் நான்கு உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு தேவைப்படும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை கணக்கெடுப்பு செய்து கணக்கீடு செய்யும் பொறுப்பு வழங்கப்படும்.

| அலுவலக உறுப்பினர்கள் | தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி |
|---|---|
| 1. துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | ஊராட்சி தலைவர் |
| 2. ஒன்றிய மேற்பார்வையாளர் | |
| 3. ஊராட்சி உதவியாளர் | |

இக்குழுவினர் கிராம ஊராட்சியில் அடங்கியுள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் நேரில் சென்று தற்பொழுதுள்ள வசதிகள் மற்றும் தேவைப்படும் அடிப்படை வசதிகள் குறித்த விவரங்களை சேகரிக்க வேண்டும்.

இக்கணக்கெடுப்பு முடிவின் அடிப்படையில் ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் அத்தியாவசியமாக தேவைப்படும் அடிப்படை வசதிகள் கணக்கீடு செய்யப்பட்டு ஊராட்சியிலுள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும், தேவைப்படும் முன்னுரிமை பணிகள் இறுதி செய்யப்படும்.

**6.3 கணக்கெடுப்பு பணியினை மேலாய்வு செய்தல்**

கணக்கெடுப்புக்குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு விவரங்களின் நம்பகத்தன்மையை 100 சதவிகிதம் சரிபார்க்கும் பொருட்டு உதவி இயக்குநர் நிலையிலான தொடர்பு அலுவலர் (Nodal Officer) ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். இவர் ஒவ்வொரு குக்கிராமத்திலும் தற்பொழுதுள்ள வசதிகள் மற்றும் தேவைப்படும் வசதிகள் அனைத்தும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என சான்றளிக்க வேண்டும்.

கணக்கீட்டுப் படிவம், சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (ஊ.வ), செயற்பொறியாளர் (ஊ.வ) மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகியோர் அடங்கிய குழுவினரால் சரிபார்க்கப்பட வேண்டும். இக்குழுவினரால் அனுமதிக்கப்பட்ட பின்னரே கணக்கீடு செய்யப்பட்ட விவரங்கள் அரசு வலை தளம் www.tnrd.gov.in –ல் உள்ளீடு செய்யப்பட வேண்டும்.

**7. பணிகள் தேர்வு, கூர்ந்தாய்வு மற்றும் நிர்வாக அனுமதி:**

**7.1 பணிகள் தேர்வு செய்தல்**

மாவட்டத்தில் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் கணக்கெடுப்பு முடிவுற்றவுடன் ஒவ்வொரு கிராம ஊராட்சிகளில் உள்ள குக்கிராமங்களில் தெரிவு செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்து கீழ்க்கண்ட உறுப்பினர்கள் அடங்கிய குழு இறுதி செய்யலாம்

(a) சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்

(b) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்)

(c) உதவி பொறியாளர்(ஊவ) / சம்பந்தப்பட்ட வட்டாரத்தைச் சேர்ந்த வட்டார பொறியாளர்

இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பணிகள் இதற்கென கூட்டப்படும் சிறப்பு கிராம சபையினரால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டிய கருத்துருக்களை ஊராட்சி வாரியாக தயாரித்து கிராம ஊராட்சித் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்), உதவிப் பொறியாளர்(ஊவ)/ஒன்றிய பொறியாளர் ஆகியோர் கையொப்பம் இட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

**7.2 பணிகளை கூர்ந்தாய்வு செய்தல்**

கிராம ஊராட்சிகளில் இருந்து பெறப்பட்ட கருத்துருக்களை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மற்றும் செயற்பொறியாளர்(ஊவ) விரிவாக கூர்ந்தாய்வு செய்ய வேண்டும். கருத்துருக்களை கூர்ந்தாய்வு செய்யும்போது கிராம ஊராட்சியில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் கணக்கெடுப்பு அறிக்கையின்படி தேவையான அனைத்து பணிகளும் விடுதல் இன்றி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு கிராம ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை முழுமையாகப் பயன்படுத்திய பின்னரும் பணிகள் விடுபட்டிருப்பின் கூடுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் திட்ட இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறையின் இதர திட்டங்களின் நிதியை ஒருங்கிணைத்து குக்கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை திட்ட வழிகாட்டுதல்களின்படி நிறைவேற்ற வேண்டும்.

கிராம ஊராட்சிக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் கூடுதல் வசதிகள் நிறைவேற்றப்பட்ட பின் நிதி ஒதுக்கீடு மீதம் இருப்பின் மாவட்டத்தில் உள்ள பிற கிராம ஊராட்சிகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தேவை ஏற்படின் அதனை பயன்படுத்தி கொள்ளலாம்.

அடிப்படை வசதிகளின் தேவைகளை பூர்த்தி செய்து அதன் இடைவெளியை குறைக்கும் நோக்கில் உபரிநிதி/கூடுதல் நிதி தேவை குறித்து கூர்ந்தாய்வு செய்த விவரங்களை மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**7.3 சீராய்வு, ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி அளித்தல்.**

மாவட்ட ஆட்சித் தலைவர், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செயற்பொறியாளர் (ஊ.வ) ஆகியோர் அடங்கிய குழு கருத்துருக்களை பரிசீலித்து கூடுதல் நிதி தேவைப்படும் கிராம ஊராட்சிக்கு மறு ஒதுக்கீடு செய்து கிராம ஊராட்சியின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கேற்றவாறு வட்டார வளர்ச்சி அலுவலரால் கருத்துரு திருத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்கண்டவாறு கூடுதல் நிதி அனைத்தும் தேவையான கிராம ஊராட்சிகளுக்கு மறு ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் கூடுதல் நிதியில் எடுக்கப்படும் பணிகளுக்கு கிராம ஊராட்சி வாரியாக மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்க வேண்டும்.

மேற்காணும் நடைமுறைக்குப்பின்னர் மாவட்டத்தில் உள்ள கிராம ஊராட்சிகளின் அனைத்து குக்கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் உபரிநிதி இருப்பின் அதனை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திற்கு திரும்ப செலுத்த வேண்டும்.

**8. நிதிகளை ஒருங்கிணைத்தல் :**

பொதுவாக, ஓர் கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் தேவைப்படும் நிதி, தாய் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியை விட கூடுதலாக தேவைப்படும். சிறப்பான திட்டமிடல் என்பது ஒரு கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யும் திறவுகோலாக இருக்க வேண்டும். கணக்கெடுப்பு விவரங்களின் முடிவின் அடிப்படையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் தேவைப்படும் பணிகளை ஏற்கனவே நடைமுறையிலுள்ள ஊரக வளர்ச்சித்துறை திட்டங்களுடன் இதர துறைகளின் திட்டங்களையும் ஒருமுகப்படுத்தி இணைக்கும் வகையில் திட்டமிட வேண்டும். அரசு வலைதளம் www.tnrd.gov.in–லிருந்து பணிகள் தேவைப்படும் பட்டியல்களை பெறும் வசதியை இத்திட்டமிடலுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கீழ்க்காணும் விவரங்கள் ஊரக வளர்ச்சித்துறை திட்ட நிதிகளை ஒருமுகப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கக்கூடியதாக அமையும்.

| வ. எண் | பணியின் தன்மை | பணியின் வகை | திட்டங்கள் |
|---|---|---|---|
| **A. அடிப்படைத் தேவைகள்** | | | |
| 1 | குடிநீர் வழங்கல் | நீராதாரத்தினை பெருக்குதல் மற்றும் குடிநீர் குழாய்களை இணைத்தல் | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி, உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி போன்ற பிற. |
| 2 | தெரு விளக்குகள் | தேவைப்படும் தெருக்கள் மற்றும் குக்கிராமங்களில் தெருவிளக்குகள் அமைத்தல் | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி, உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி , சூரிய தெரு விளக்கு திட்டங்கள் போன்ற பிற திட்டங்கள் |
| 3. | தெருக்கள் மற்றும் சந்துக்கள் | சிமெண்ட் கான்கிரிட் நடைபாதைகள் அமைத்தல் | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி, உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி போன்ற பிற |
| 4. | சுடுகாடு / இடுகாடு | புதிய சுடுகாடு/இடுகாடு அமைத்தல் அல்லது ஏற்கனவே உள்ள சுடுகாடு / இடுகாடுகளை மேம்பாடு செய்தல் | |
| 5. | மயான அணுகு சாலை அமைத்தல் | புதிய அணுகு சாலை அமைத்தல் அல்லது ஏற்கனவே உள்ள சாலைகளை மேம்படுத்துதல் | |
| **(B) கூடுதல் தேவைகள்** | | | |
| (i)<br>(ii)<br>(iii)<br>(iv) | அங்கன்வாடி மையம்<br>நியாய விலைக்கடை<br>சுய உதவிக்குழு கட்டடம்<br>கதிரடிக்கும் களம் | புதிய கட்டடங்கள் கட்டுதல் | அனைத்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி திட்டங்கள் |
| | | ஏற்கனவே உள்ள கட்டடங்களை பழுது பார்த்தல் | அங்கன்வாடி பழுதுபார்த்தலுக்கான சிறப்பு நிதி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதிகள் |
| (iv) | விளையாட்டு மைதானம் | விளையாட்டு மைதானம் அமைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் விளையாட்டு பொருட்கள் வாங்குதல் | தற்போது நடைமுறையிலுள்ள ஊரக வளர்ச்சி திட்டங்கள், தமிழ்நாடு மாநில விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தின் ‘பைக்கா’ திட்டம் மற்றும் தன்னிறைவுத் திட்டம் |

குறிப்பு – கூடுதல் தேவைப்பணிகளின் கீழ் இடம்பெற்றுள்ள அங்கன்வாடி மையங்களை கட்டும் பணியினை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட நிதியினை ஒருங்கிணைப்பதன் மூலம் மேற்கொள்ள முன்னுரிமை வழங்கலாம்.

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்கள் தவிர பிற துறைகளில் பல வளர்ச்சித் திட்டங்கள் உதாரணமாக வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளின் திட்டம், தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், வேளாண்மைத் துறையின் பிறத் திட்டங்கள், தோட்டக்கலைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளத் துறை, பட்டு வளர்ப்பு, நெடுஞ்சாலை மற்றும் ஊரகச் சாலைகள் துறை, பொதுப்பணித் துறை, சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை (மருத்துவ முகாம்கள்) தொழிலாளர் நலத்துறை, சமுக நலத்துறை மற்றும் கல்வித் துறை போன்ற பிறத் துறைகளின் மூலமும் பல்வேறு திட்டங்கள் மாவட்ட அளவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பிறத் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்து தமிழ்நாடு குக்கிராம மேம்பாட்டுத் திட்டத்தினை அனைத்து குக்கிராமங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைப்புடன் செயல்படுத்த வேண்டும்.

## 9. நிதி பராமரிப்பு முறை:

தாய்த் திட்டத்திற்காக மாவட்ட ஆட்சித் தலைவரும், வட்டார வளர்ச்சி அலுவலரும் (கிராம ஊராட்சி) தனித்தனியாக வங்கிக் கணக்கு ஒன்றை பராமரிக்க வேண்டும். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் மட்டுமே வங்கி சேமிப்பு கணக்குகள் தொடங்கப்படுதல் வேண்டும். கிராம அளவில் தனியே திட்டத்திற்கென வங்கி கணக்கு பராமரிக்கத் தேவையில்லை. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரும், வட்டார அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) தனியே கணக்கு பராமரித்தல் போதுமானது. ஒரு கிராம ஊராட்சிக்கான நிதி மற்றொரு கிராம ஊராட்சிக்கான நிதியுடன் கலந்து விடுவதைத் தடுக்க ஒவ்வொரு ஊராட்சிக்குமான வரவு செலவுகளை குறித்திட வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அவர்கள் ஒவ்வொரு ஊராட்சிக்கும் தனிபக்கம்/பக்கங்கள் ஒதுக்கி பேரேடு (ledger) ஒன்று பராமரித்திட வேண்டும்.

## 10. பணி நிறைவேற்றும் முறை:

அனைத்து பணிகளும் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவு அற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் அதன் 2000–ம் ஆண்டு விதிகளின்படி செயல்படுத்தப்பட வேண்டும். அனைத்து பணிகளுக்கும் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் ஆவார். ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் அனுமதித்தல் தொடர்பாக அரசாணை (நிலை) எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(ப.ரா.1) துறை, நாள் 20.12.2007ல் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். இருப்பினும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் கீழ்கண்ட வழிமுறைகள் செயல்படுத்தப்பட வேண்டும்.

- மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பதில் குறிப்பு பெறப்படாத இனங்களிலும், தோராய மதிப்பீட்டினைவிட ஒப்பந்தப்புள்ளி அதிக அளவில் உள்ள இனங்களிலும் ஒப்பந்தப்புள்ளி மூலம் அனுமதிக்கப்பட்ட பணிகள் இடையிலேயே கைவிடப்பட்ட இனங்களிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அனுமதியின் பேரில் கீழ்க்காணும் விருப்பப்படியான தேர்வினை செயல்முறைப்படுத்தலாம்.
- ரூ.5 இலட்சத்திற்கு குறைவான மதிப்புள்ள பணிகளை, கிராம ஊராட்சியால் துறை மூலமாக செயல்படுத்தலாம்.
- ரூ. 5 இலட்சம் அல்லது அதற்கும் மேலான மதிப்புள்ள பணிகளை திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலமாக, கிராம ஊராட்சி செயல்படுத்தலாம்.

**11. தகவல், கல்வி, தொடர்பு நடவடிக்கைகள் மற்றும் ஆவணப்படுத்துதல் :**

இத்திட்டத்தின் பல்வேறு நிலைகளை பணி தெரிவு செய்வதில் இருந்து அவற்றை செய்து முடிக்கும் வரை உள்ள அனைத்து விவரங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவணப்படுத்துதல் வேண்டும். பணிகள் தொடங்குவதற்கு முன்னரும் நடைமுறைப்படுத்திய பிறகும் திட்டத்தில் பெறப்படும் பயன்களை காட்டும் தொடர்புடைய நிழற்படங்கள் மற்றும் ஒளி நாடாக்கள் தயார் செய்வதன் மூலம் பிற்காலத்தில் இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஒப்பு நோக்க ஏதுவாக இருக்கும். சமுதாய அடிப்படையிலான கட்டமைப்பு வெற்றிக் கதைகள் தயாரிக்க வேண்டும். இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டில் 3 சதவிகிதம் கணக்கெடுப்பு, ஆரம்ப கட்டப்பணிகள், ஆவணப்படுத்துதல், தகவல் கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள், கணக்கெடுப்பு மற்றும் கணக்கெடுப்பினை மேற்பார்வை செய்தல் மற்றும் பணிகளின் முன்னேற்றத்தினை மாவட்ட அளவில் பணியாளர்களை அமர்த்தி கண்காணித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளோடு ஒதுக்கீட்டில் 2 சதவிகிதம் ஊரக வளர்ச்சி இயக்கக அளவில் ஆரம்ப கட்டப் பணிகள், ஆவணப்படுத்துதல், கணக்கெடுப்பு மற்றும் பணிகளின் முன்னேற்றத்தினை பணியாளர்களை அமர்த்தி கண்காணிக்கும் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படும்.

இதே போன்று மாநில தர மதிப்பீட்டாளர் (SQM) (திட்டங்கள்) அவர்களது மதிப்பூதியம்/பயணப்படி ஆகியவை தகவல், கல்வி, தொடர்பு நிதியிலிருந்து வழங்கப்படும். குக்கிராமங்களில் எடுக்கப்பட்ட பணிகள் மதிப்பீட்டுடன் பொது மக்கள் அறியும் வகையில் தகவல் பலகைகள் ஒவ்வொரு குக்கிராமத்திலும் வைக்கப்படவேண்டும்.

தேவையின் அடிப்படையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருடன் கலந்தாலோசனை செய்து தாய்த் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்குத் தேவைப்படும் மாறுதல்களை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

ககன்தீப் சிங் பேடி,
அரசு செயலாளர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.